1) பரம்பிக்குளம், ஆனைமலை பகுதிகளில் வசிக்கும் பழங்குடி மக்களான காடர்கள் பேசும் மொழி ____.
   a. மலையாளம்
   b. தமிழ்
   c. தாலாட்டு
   d. **ஆல்அலப்பு**
2) கதர் பிறந்த கதை என்ற கவிதை நூலின் ஆசிரியர்?
   a. பாரதியார்
   b. கனகசுப்புரத்தினம்
   c. **கவிமணி**
   d. இரா. இளங்குமரனார்
3) பொருத்துக.
   i. உலக ஈர நில தினம் - 1. அக்டோபர் 5
   ii. உலக ஓசோன் தினம் - 2. பிப்ரவரி 2
   iii. உலக இயற்கை தினம் – 3. அக்டோபர் 6
   iv. உலக வனவிலங்கு தினம் – 4. அக்டோபர் 3
   v. உலக இயற்கை சீரழிவுத் தடுப்பு தினம் - 5. செப்டம்பர் 16
   a. 14231
   b. **25431**
   c. 12435
   d. 21543
4) மக்கள் வாழும் நிலப் பகுதியைக் குறிக்கும் சொல்?
   a. **வைப்பு**
   b. விசும்பு
   c. பரவை
   d. ஆழி

ஆன்லைன் தேர்விற்கு : https://forms.gle/LKL1q7Xz94SELNGE6

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

5) கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட கண்ணெழுத்துக்கள் குறித்த செய்தி இடம் பெற்றுள்ள நூல்?

a. தொல்காப்பியம்

b. நன்னூல்

c. **சிலப்பதிகாரம்**

d. நெடுநல்வாடை

6) மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்துக்கள்?

a. உயிர் எழுத்துக்கள்

b. **மெல்லின மெய் எழுத்துக்கள்**

c. இடையின மெய் எழுத்துக்கள்

d. ஆய்த எழுத்து

7) தவறான சொல் மரபை கண்டறி.

a. ஆந்தை அலறும்

b. புறா குனுகும்

c. **சேவல் கொக்கரிக்கும்**

d. கூகை குழறும்

8) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த், கவிஞரேறு, பாவலர்மணி போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவர்?

a. கண்ணதாசன்

b. **வாணிதாசன்**

c. பாரதிதாசன்

d. பாரதியார்

9) வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று - இக்குறளில் பயின்று வரும் அணி?

a. உவமை அணி

b. பிறிது மொழிதல் அணி

c. எடுத்துக்காட்டு உவமையணி

d. **இல்பொருள் உவமையணி**

10) ஸ்ரீரங்கத்து தேவதைகள் நூலின் ஆசிரியர் யார் ?

a. **சுஜாதா**

b. அனுராதா ரமணன்

c. இந்திரா பார்த்தசாரதி

d. ராஜம் கிருஷ்ணன்

11) காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது போல என்பது எச்செயலை குறிக்கிறது?

a. ஒற்றுமையின்மை

b. பயனற்ற செயல்

c. எதிர்பாராத நிகழ்வு

d. **தற்செயல் நிகழ்வு**

12) விசும்பு என்பதன் பொருள் யாது?

a. **ஆகாயம்**

b. நிலம்

c. நீர்

d. காற்று

13) அரச்சலூர் கல்வெட்டில் இருந்த எழுத்தின் வகை.

a. தமிழெழுத்து

b. வட்டெழுத்து

c. **இரண்டும்**

d. எதுவும் இல்லை

14) குறிப்பு வினையெச்சம் எதனை வெளிப்படையாக காட்டாது?

a. **காலம்**

b. வினை

c. பண்பு

d. பெயர்

15) நீதிநெறி விளக்கம் எத்தனை வெண்பாக்களால் ஆனது?

a. 98

b. **102**

ஆன்லைன் தேர்விற்கு : https://forms.gle/LKL1q7Xz94SELNGE6

c. 118

d. 133

16) கீழ்க்கண்டவற்றுள் குமரகுருபரரால் எழுதப்படாத நூல் எது?

a. **கந்தர் அனுபூதி**

b. கயிலைக் கலம்பகம்

c. சகலகலாவல்லி மாலை

d. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

17) கலித்தொகை எந்த அடைமொழியால் அழைக்கப்படுகிறது?

a. இயற்கை வாழ்வில்லம்

b. **இயற்கை இன்பக்கலம்**

c. இயற்கை இன்பவாழ்வு

d. இயற்கை அன்பு

18) புற உலக ஆராய்ச்சிக்கு ______ கொழுகொம்பு போன்றது.

a. இயற்கைக்கல்வி

b. இசைக்கல்வி

c. நாடகக்கல்வி

d. **அறிவியல் கல்வி**

19) முருகன் அல்லது அழகு – நூலாசிரியர்.

a. **திரு.வி.க**

b. அறிஞர் அண்ணா

c. ராஜாஜி

d. கருணாநிதி

20) கவிதைக்கு அழகு கற்பனை - இதில் பயின்று வரும் வேற்றுமை?

a. மூன்றாம் வேற்றுமை

b. **நான்காம் வேற்றுமை**

c. ஐந்தாம் வேற்றுமை

d. ஆறாம் வேற்றுமை

21) எட்டாம் வேற்றுமை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. எழுவாய் வேற்றுமை

b. செயப்படுபொருள் வேற்றுமை

c. **விளி வேற்றுமை**

d. பயனிலை வேற்றுமை

22) தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பட்டவர்?

a. அப்பர்

b. **சுந்தரர்**

c. திருஞானசம்பந்தர்

d. மாணிக்கவாசகர்

23) திருவெம்பாவை யாரால் பாடப்பட்டது?

a. சேக்கிழார்

b. ஆண்டாள்

c. நம்பியாண்டார் நம்பி

d. **மாணிக்கவாசகர்**

24) பானை செய்யும் சக்கரத்தின் பெயர் என்ன?

a. கலயம்

b. தொட்டி

c. **திருவை**

d. வனைதல்

25) தமிழ்நாட்டின் மாநில மரம்.

a. வேம்பு

b. ஆல்

c. அரசு

d. **பனை**

26) சிறு உடுக்கை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. **குடுகுடுப்பை**

b. தவண்டை

c. கைப்பறை

d. எதுவும் இல்லை

27) வேறுபட்டதைக் கூறு.

ஆன்லைன் தேர்விற்கு : https://forms.gle/LKL1q7Xz94SELNGE6

a. உடுக்கை
b. குடமுழா
c. **சேகண்டி**
d. திமிலை

28) ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஊர் எது?

a. கொடைக்கானல்
b. **ஏற்காடு**
c. ஏலகிரி
d. வால்பாறை

29) பழங்காலத்தில் விலையை கணக்கிட அடிப்படையாக அமைந்த பொருள்.

a. **நெல்**
b. புல்
c. உப்பு
d. மிளகு

30) அரசரைக் காப்பாற்றுவது எது?

a. செங்கோல்
b. வெண்கொற்றக்குடை
c. **குற்றமற்ற ஆட்சி**
d. படைவலிமை

31) 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையில் தமிழில் முதல் நூல்.

a. தக்கயாகப்பரணி
b. மோகவதைப்பரணி
c. போர்ப்பரணி
d. **கலிங்கத்துப்பரணி**

32) சேர்த்து எழுது. *"இதம்+தரும்".*

a. **இதந்தரும்**
b. இதம்தரும்

c. இதத்தரும்

d. இதைத்தரும்

33) தமிழ்நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்த முதல்வர்?

a. ராஜாஜி

b. காமராசர்

c. **எம்.ஜி. இராமச்சந்திரன்**

d. ஓமந்தூரார்

34) தவறான கூற்று எது?

a. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்

b. **உம்மைத்தொகையில் வல்லினம் மிகும்**

c. வினைத்தொகையில் வல்லினம் மிகாது

d. உருவகத்தில் வல்லினம் மிகும்

35) தமிழ் மூவாயிரம் எனப்படும் நூல்?

a. **திருமந்திரம்**

b. திருவாசகம்

c. தேவாரம்

d. பெரியபுராணம்

36) குணங்குடி மஸ்தான் சாகிபுடன் தொடர்பில்லாதது எது?

a. எக்காளக் கண்ணி

b. மனோன்மணிக் கண்ணி

c. **பராபரக் கண்ணி**

d. நந்தீசுவர கண்ணி

37) தென்னிந்தியச் சமூக சீர்திருத்தத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்?

a. தந்தை பெரியார்

b. **அயோத்திதாசர்**

c. இரட்டைமலை சீனிவாசன்

d. ராதாகிருஷ்ணன்

38) தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்த கருத்துகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்?

a. அயோத்திதாசப் பண்டிதர்
b. தங்கவயல் அப்பாதுரை
c. **இருவரும்**
d. எவருமில்லை

39) முன்பு வழக்கத்தில் இருந்த நாணய பெயர் எது ?

a. முழம்
b. மாகாணி
c. வீசம்
d. **சல்லி**

40) பொருத்துக.

i. வெண்பா – 1. தூங்கல் ஓசை
ii. ஆசிரியப்பா – 2. துள்ளல் ஓசை
iii. கலிப்பா – 3. செப்பல் ஓசை
iv. வஞ்சிப்பா – 4. அகவல் ஓசை

a. 1324
b. 4231
c. 4213
d. **3421**

41) நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் ____.

a. பொருட்டு
b. நட்பு
c. **தொடர்பு**
d. உயர்வு

42) பொச்சாப்பு என்பதன் பொருள் என்ன?

a. **சோர்வு**
b. பொறுமை

ஆன்லைன் தேர்விற்கு : https://forms.gle/LKL1q7Xz94SELNGE6

c. பொறாமை

d. பகை

43) 1930ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தி வெற்றிகண்டவர்?

a. தந்தை பெரியார்

b. **அம்பேத்கார்**

c. அல்லாடி கிருஷ்ணமூர்த்தி

d. இரட்டைமலை சீனிவாசன்

44) புத்தரும் அவரின் தம்மமும் என்ற நூலின் ஆசிரியர்?

a. அயோத்திதாசர்

b. இளங்கோஅடிகள்

c. கண்ணதாசன்

d. **அம்பேத்கார்**

45) தமிழக அரசின் விருதைப் பெற்ற கோமகளின் புதினம்

a. உயிர் அமுதாய்

b. **அன்னை பூமி**

c. நிலாக்கால நட்சத்திரங்கள்

d. அன்பின் சிதறல்

46) செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல _______ யாவுள காப்பு.

a. **வினைக்கரிய**

b. பயற்கரிய

c. உயிர்கரிய

d. ஆய்ந்தறிய

47) இலக்கண குறிப்பு வரைக – *"வாய்ப்பவளம்"*

a. உவமைத்தொகை

b. உம்மைத்தொகை

c. வினைத்தொகை

d. **உருவகம்**

48) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம்?

a. கோலாலம்பூர்
b. தஞ்சாவூர்
c. **மதுரை**
d. காஞ்சிபுரம்

49) யாப்பு இலக்கணத்தின்படி எழுதப்படுவது.

a. புதுக்கவிதை
b. **மரபுக் கவிதை**
c. ஹைக்கூ
d. எதுவும் இல்லை

50) கலிங்கத்துப்பரணி நூலை "தென்தமிழ்த் தெய்வப் பரணி" என்று புகழ்ந்தவர்?

a. செயங்கொண்டார்
b. **ஒட்டக்கூத்தர்**
c. சேக்கிழார்
d. சீத்தலைச்சாத்தனார்

51) இஸ்ரேல் நாட்டின் எல்லட்டில் நடந்த 70-வது பிரபஞ்ச அழகி (MISS UNIVERSE) 2021 போட்டியில் பட்டம் வென்ற இந்திய பெண் ஹர்னாஸ் சாந்து எந்த மாநிலத்தை சேர்ந்தவர்?

a. **பஞ்சாப்**
b. ஹரியானா
c. ராஜஸ்தான்
d. ஜார்கண்ட்

52) "மிஸ் யூனிவர்ஸ்" அழகியாக தேர்ந்தெடுக்கப்படாத இந்தியர்?

a. சுஷ்மிதா சென் (1994)
b. லாரா தத்தா (2000)
c. ஹர்னாஸ் சாந்து (2021)
d. **பிரியங்கா சோப்ரா(2000)**

53) மாநிலங்களவையின் தற்போதைய துணைத்தலைவர் யார்?

a. வெங்கையா நாயுடு

b. **ஹரிவன்த் நாராயண்சிங்**

c. ஓம் பிர்லா

d. எவருமில்லை

54) உலகில் ஒமைக்ரான் பாதிப்புக்கு பலியான முதல் நபர் எந்த நாட்டை சேர்ந்தவர்?

a. தென் ஆப்பிரிக்கா

b. **பிரிட்டன்**

c. அமெரிக்கா

d. தாய்லாந்து

55) உலகின் காகிதமில்லா முதல் அரசு ?

a. **துபாய்**

b. அமெரிக்கா

c. பிரிட்டன்

d. கனடா

56) முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் பயணித்த MI-17V5 ஹெலிகாப்டரை தயாரித்த "கஸன்" நிறுவனம் எந்த நாட்டில் உள்ளது?

a. அமெரிக்கா

b. **ரஷ்யா**

c. ஜப்பான்

d. சீனா

57) சமீபத்தில் காலமான இந்தியாவின் முதல் பெண் மனநல மருத்துவரான சாரதா மேனன் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்?

a. **கர்நாடகா**

b. தமிழ்நாடு

c. தெலுங்கானா

d. கேரளா

58) "She is a Changemaker" என்ற திட்டத்தை அறிவித்த அமைப்பு எது?

a. **NCW**

b. NHRC

c. UNO

d. SAARC

59) தேசிய மாசு கட்டுப்பாட்டு தினம்.

a. டிசம்பர் 1

**b. டிசம்பர் 2**

c. டிசம்பர் 31

d. டிசம்பர் 4

60) 22-வது சட்ட ஆணையம் அமைக்கப்பட்ட நாள்.

a. 21-02-2019

**b. 21-02-2020**

c. 21-02-2021

d. 21-02-2018

**ஆயக்குடி மரத்தடி மையத்தில் வகுப்புகள் ஞாயிறு மட்டுமே நடைபெறும் மற்ற நாட்களில் வகுப்புகள் நடைபெறாது.**

**ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்**

**P.ராமமூர்த்தி - 9486301705**

**Telegram Group Link: https://t.me/joinchat/VXfxxzA3AJanAzro**

**ஆன்லைன் தேர்விற்கு : https://forms.gle/LKL1q7Xz94SELNGE6**